செங்கோட்டை நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம்
11.12.2020 அன்று முற்பகல் 11.00 மணிக்கு
நடைபெற்றதின் கூட்ட நடவடிக்கைகள்
தலைமை செல்வி வே. நித்தியா பி.டெக், எம்.டி.ஏ,
தனி அலுவலர் அவர்கள்

மன்றப்பொருள்.

செங்கோட்டை நகராட்சி வார்டு 1 காலாங்கரை பகுதிக்குச் செல்லும் குடிநீர் விநியோக குழாயில் இணைக்கப்பட்டுள்ள நீர் உந்து நிலையத்திலுள்ள மின் மோட்டார் பழுதாகி உள்ளதை பழுது நீக்கம் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 07.12.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தக்காரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி வார்டு 1 காலாங்கரை பகுதிக்குச் செல்லும் குடிநீர் விநியோக குழாயில் இணைக்கப்பட்டுள்ள நீர் உந்து நிலையத்திலுள்ள மின் மோட்டார் பழுதாகி உள்ளதை பழுது நீக்கம் செய்ய | ரூ. 10000/– | மெஸர்ஸ். ரோக்கால் & கோ, 3, சியான் பில்டிங், கிழக்கு வெளி வீதி, மதுரை | மதிப்பீடு விகிதம் |
| | | | மெஸர்ஸ். கே.எஸ்பி. எண்டர்பிரைசஸ், 48எச்/10, பை–பாஸ் ரோடு, திருநெல்வேலி | மதிப்பீட்டை விட 0.91% அதிகம் |

அலுவலக குறிப்பு.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த பட்ச விலைவிகிதமாக, மதிப்பீட்டு விகிதத்திற்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள மெஸர்ஸ். ரோக்கால் & கோ, மதுரை என்பவருடைய ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகிதத்திற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

மன்றப்பொருள்

செங்கோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020–21–ன் கீழ் ரூ. 500.00 லட்சம் மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்ற தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20557/2020/இ3, நாள்.11.12.2020 ஆம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. கோடியில்) | சிறப்பு சாலைகள் திட்டநிதி (ரூ.கோடியில்) | நகராட்சி பங்களிப்பு (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| செங்கோட்டை | 5.00 | 4.25 | 0.75 |

மேற்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், கீழ்காணும் பணிகளை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொளளவும், இந்த பணிகளுக்கு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கவும் மனறத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | சாலையின் நீளம் (கிமீ) | சாலையின் அகலம் (மீ) | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | பெரியசாமி தெரு, சப்பையா தெரு, பெரிய பள்ளிவாசல் தெரு, பூம்புகார் தெரு, காதர் ஒலி தெரு, முத்தழகிஅம்மன் கோவில் தெரு, டவுண்ஹால் ரோடு, வடக்கு ரத வீதி மற்றும் கொட்டாரம் ரோடு (வார்டு எண்.2,4,6,18,19,20,21,22 மற்றும் 23) தார் சாலை புதுபித்தல் பணி | 1.940 கிமீ | 4.00 – 9.00 | 140.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | ஆனந்த தியேட்டர் ரோடு, காமராஜ் காலனி ரோடு, வல்லம் ரோடு 1 (ம) 2, பேருந்து நிலைய பின்பக்க சாலை, கீழ ரத வீதி, மேற்கு ரதவீதி, வடக்கு ரத வீதி (வார்டு எண்.11,12,2 மற்றும் 4) தார் சாலை புதுப்பித்தல் பணி | 2.000 கி.மீ | 3.50 – 14.00 | 132.00 |
| 3 | அண்ணாத் தெரு, அண்ணா நகர் தெருக்கள், பள்ளிவாசல் தெரு மற்றும் எஸ்.ஆர்.கே.தெரு (வார்டு எண். 17,21, 12) பேவர் பிளாக் பதிக்கும் பணி | 1.200 கி.மீ | 3.00 – 3.50 | 100.00 |
| 4 | சாமியார் தெரு, காலசாமி தெரு, வெள்ளையன் தெரு, காமாட்சி அம்மன் கோவில் தெரு, புலவர் தெரு மற்றும் ஆறுமுகசாமி ஒடுக்கம் சாலை (வார்டு எண்.18, 17, 13, 6) பேவர் பிளாக் பதிக்கும் பணி | 1.620 கி.மீ | 2.00 – 3.50 | 128.00 |
| | | 6.760 | | 500.00 |

அலுவலககுறிப்பு.

மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றப்பொருள்.

செங்கோட்டை நகராட்சி உள்ளூர் ஆதாரமான சசிவோத்தமா நீரேற்று நிலையத்தில் உள்ள 30 குதிரை திறன் கொண்ட மின் மோட்டார் Standby (மாற்று மோட்டார்) மற்றும் ஸ்டார்டர் பழுதாகி உள்ளதை பழுது நீக்கம் செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, 07.12.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தக்காரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | நீரேற்று நிலையத்தில் உள்ள 30 குதிரை திறன் கொண்ட மின் மோட்டார் Standby (மாற்று மோட்டார்) மற்றும் ஸ்டார்டர் பழுதாகி உள்ளதை பழுது நீக்கம் செய்ய | ரூ. 0.85 லட்சம் | திரு.தா.ஆபேல் ஜெயசீலன் | மதிப்பீட்டை விட 4.56 % கூடுதல் |
| | | | திரு.எஸ்.பரமசிவன் | மதிப்பீட்டை விட 0.37% குறைவு |

அலுவலக குறிப்பு.

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த பட்ச விலைவிகிதமாக, மதிப்பீட்டை விட 0.37 % குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.எஸ். பரமசிவன் என்பவருடைய ஒப்பந்தப்புள்ளியின் விலைவிகிதத்திற்கு மனறம் ஒப்புதல் வழங்கலாம்.